## கேள்வி:

# "இயேசு ஒரு நல்ல மனிதராயிருப்பின் அவர் ஏன் ஒரு சாதாரண குற்றவாளியைப் போல் மரிக்க வேண்டும்?"

## பதில்:

*கல்வாரியைப்பற்றி நாம் எண்ணுகையில், "இயேசு ஒரு நல்ல மனிதராயிருப்பின் அவர் ஏன் ஒரு சாதாரண குற்றவாளியைப் போல் மரிக்க வேண்டும்?" என்ற கேள்வி கேட்கும்படி நாம் தூண்டப்படுகிறோம்.*

*பெரிய கண்களையுடைய இளம் வயதுப் பெண் ஒருத்தி ஒருமுறை என்னிடம் இந்தக் கேள்வியைப் பின்வருமாறு கேட்டாள்: "இயேசு, தவறு ஒன்றும் செய்யவில்லையென்றால், பின்பு அவர் ஏன் சிலுவையிலறையப்பட்டார்? என்னைப் பொறுத்தமட்டில் அது நல்லதாகக் காணப்படவில்லையே." இது ஒரு அர்த்தமுள்ள கேள்வியல்லவா?*

*இது அர்த்தமுள்ளதுதான். ஏனெனில், முதலாவதாக, இயேசு ஒரு நல்ல மனிதராக இருந்தார். வரலாற்றில் அநேகமாக எல்லா பெரிய மனிதர்களிடத்திலும் ஏதேனும் தவறுகள் காணப்படுகிறது. அவர்கள் பெரிய மனிதர்கள்தான், ஆயினும் குறைகள் உடையவர்களாயிருந்தனர். ஆனால் இயேசு அப்படிப்பட்டவரல்லர். அவர் ஒரு நல்ல மனிதர் என்பதை யாரும் மறுத்ததில்லை.*

*இது மேலும் அர்த்தமுள்ளதுதான். ஏனெனில், இயேசு ஒரு சாதாரண குற்றவாளியைப் போல சிலுவையில் அறையப் பட்டார். பழங்கால உலகத்தில் பலர் சிலுவையிலறைப் பட்டனர். தீரு பட்டணத்திற்கு எதிராக முகாமிட்டிருந்த வேளையில் மகா அலெக்ஸான்டர் ஆயிரக்கணக்கான தமது*

எதிரிகளைச் சிலுவையிலறைந்தார். யோசிபஸின் கூற்றுப்படி, கி.பி. 70ல் ரோமர்கள் எருசலேமைக் கடைசியாகக் கைப்பற்றியபோது, முப்பதாயிரம் யூதர்களை அந்த நகரத்தின் மதில் சுவர்களில் அறைந்தனர்.[1]

இன்னொரு வகையில், இயேசுவின் மரணம் "பொதுவான" குற்றவாளிகளின் மரணம் போல் இருக்கவில்லை. ரோமர்கள் மத்தியில் சிலுவையிலறைதல் பொதுவாகக் காணப்பட்டது, ஆனால் அது "அடிமைகள், அயல் நாட்டவர்கள் அல்லது கீழ்த்தரமான குற்றவாளிகள்" ஆகியோருக்கு மட்டுமே ஒதுக்கப் பட்டதாயிருந்தது. ரோமக் குடிமகன்கள் சாதாரணமாகச் சிலுவையில் அறையப்படுதில்லை.[2] அந்நாட்களில் சிலுவை யிலறையப்படுதல் என்பது "சாதாரண குற்றவாளிகளுக்கான" தண்டனையாக இல்லாமல், "அசாதாரண குற்றவாளிகளுக்கு" கொடுக்கப்படும் தண்டனையாக இருந்தது; மனித குலத்தில் கீழ்த்தரமான, பயனற்றவர்களுக்கு மட்டுமே அந்தத் தண்டனை ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. இதற்கென்றே அசாதாரணமான அவமானம் தரும், வலி மிகுந்த, நெடுநேரம் கழித்து மரணத்தை ஏற்படுத்தும் அத்தண்டனை ஒதுக்கப்பட்டிருந்தது.

இயேசுவைப் போன்றே ஆயிரக்கணக்கானவர்கள் சிலுவை யில் மரித்தனர். அவர் அவ்வளவு நல்லவர் என்றால், மனித குலத்தில் பயனற்றவர் போல் அவர் ஏன் மரிக்க வேண்டும்?

உண்மையில், இயேசுவின் மரணமானது, சிலுவையிலறை யப்பட்ட மற்றவர்களின் மரணம் போலவே இருந்திருக்கு மானால், அந்த மரணத்தினால் நமக்கு எவ்வித மதிப்பும் கிடைத்திருக்க முடியாது. கிறிஸ்துவின் மரணம் பல விதங் களில் தனித்தன்மை வாய்ந்தது என்ற உண்மையின் மேல் தான் கிறிஸ்தவத்தின் நம்பிக்கையே ஊன்றியுள்ளது. தோற்றத்திற்கு, அவரது மரணம், மற்ற அநேகரைப் போலிருந்தாலும் உண்மை யில் அது மிகவும் வித்தியாசமானதாகும்.

## அது ஒன்றுமறியாத ஒரு மனிதரின் மரணமாகும்

ஒன்றுமறியாத ஒரு மனிதரின் மரணம் என்பதால், இயேசுவின் மரணம் வித்தியாசமானதாகும்.

தண்டனைக்கு ஏதுவான ஏதொன்றையும் இயேசு

செய்திருக்கவில்லையென்று சுவிசேஷங்கள் தெளிவாய்க் கூறுகின்றன. இயேசுவின் விரோதிகள் அவருக்கெதிராகப் பொய்ச்சாட்சி தேடியும் அகப்படவில்லை (மத். 26:59, 60). பொய்யர்கள்கூட குற்றம்சாட்ட இயலாத வகையில் இயேசு ஒன்றுமறியாதவராக இருந்தார்! ரோம அதிகாரிகள், பிலாத்து மற்றும் ஏரோது ஆகியோர் இயேசுவிடம் குற்றமொன்றும் காணவில்லை (லூக். 23:14, 15). இயேசுவின் குற்றத்தைக் குறித்து குறிக்கோளுடன் விசாரித்தறிந்தவர்களான பிலாத்து மற்றும் ஏரோது ஆகிய இருவருமே அவர் குற்றமற்றவர் என்றே கூறினார்கள்! பிலாத்துவின் மனைவி கூட அவர் குற்றமற்றவர் என்றாள்! அவள் தனது கணவனுக்கு, ''... நீர் அந்த நீதிமானுக்கு ஒன்றும் செய்ய வேண்டாம் ...'' என்று எழுதி அனுப்பினாள் (மத். 27:19). அவர் மரித்தபோது, அவரைக் கொன்ற நூற்றவர் தலைவர் அவரைக் குற்றமற்றவர் என்று அடையாளம் கண்டார். அவரது மரணத்தைக் கண்டபின் அவர், "மெய்யாகவே இந்த மனுஷன் நீதிபரனாயிருந்தான் என்று சொல்லி தேவனை மகிமைப்படுத்தினான்" (லூக். 23:47; "மெய்யாகவே இவர் ஒரு நீதியுள்ள மனுஷன்," KJV). இயேசு மரிக்கையில் அங்கிருந்த இருதய கடினமுள்ள படை வீரர்கள் அவர் குற்றமற்றவர் என்று உணர்ந்திருப்பார்களேயானால், நாமும் அவ்வாறே உணர்ந்தாக வேண்டும். இயேசுவோடு சிலுவையிலறையப்பட்ட இரு கள்ளர்களில் ஒருவன் அவர் குற்றமொன்றும் செய்திருக்கவில்லையென்பதை, "... இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே" என்று சொல்லி ஒப்புக் கொண்டான் (லூக். 23:41). இயேசு முழுமையாகவே குற்றமொன்றும் அறியாதவராயிருந்தார்.

## அது பாவமற்ற ஒரு மனிதரின் மரணமாகும்

பாவமற்ற ஒரு மனிதரின் மரணம் என்பதால் இயேசுவின் மரணம் வித்தியாசமானதாகும். இயேசு சிலுவையிலறையப் பட்டதற்கு ஏற்ற எந்த ஒரு குற்றமும் செய்யவில்லை. அது வழக்கமற்றது, ஆனாலும் இணையற்றதாகும். நாம் இயேசுவைப்பற்றி இதுவரை கூறியதெல்லாம், மற்றவர் களாலும் கூறப்பட முடியும்: அவர் குற்றமற்றவராகவே மரித்தார்.

*வேறு எவரைக் குறித்தும் நாம் இவ்வாறு கூற முடியாது. இயேசு ஒருவர் மட்டுமே பாவமற்றவராக வாழ்ந்து மரித்தார். சிலுவையிலறையப்பட்டபோது மட்டுமன்றி, அவர் தமது வாழ்க்கை முழுவதுமே பாவமற்றவராக, பாவமறியாத வராகவே இருந்தார்!*

*இயேசுவைப்பற்றி, எபிரெயருக்கு எழுதிய ஆசிரியர், "... எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டும், பாவமில்லாத வராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்" என்று கூறுகிறார் (எபி. 4:15). வனாந்தரத்தில் சாத்தானின் சோதனை களை இயேசு மறுதலித்தார். ஆனால் அது அந்த வரலாற்றின் முடிவாகவில்லை. அவர் "... எல்லா விதத்திலும் நம்மைப் போல சோதிக்கப்பட்டார்,'' இருப்பினும் பாவமற்றவராகவே இருந்தார்.*

*''என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்?" என்று இயேசு கேட்டார் (யோவா. 8:46). அன்றும் ஒருவருமில்லை, இன்றுவரை கூட ஒருவருமில்லை, இயேசு பாவமற்றவராயிருந்தபடியினால் அவரது மரணம் தனிச் சிறப்பானதாகும்!*

## அது முன்னுரைக்கப்பட்டது

*அது முன்னுரைக்கப்பட்டிருந்ததால், இயேசுவின் மரண மானது வித்தியாசமானதாகும். அவர் தமது சொந்த மரணத்தை முன்னதாகவே கண்டார் மற்றும் முன்னுரைத்தார். பேதுரு தமது மாபெரும் அறிக்கையை செய்த பிறகு, இயேசு, சபையின் ஆரம்பம் பற்றிப் பேசினார்; பிறகு இயேசு, "... தாம் எருச லேமுக்குப் போய், ... கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந் திருக்க வேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்" (மத். 16:21). அச்சமயத்தில் அவரைக் கொலை செய்யவேண்டும் என்ற கருத்து வெகுவாகப் பரவி யிருக்கவில்லை. இயேசுவின் மிகப் பிரசித்திபெற்ற தருணங் களில் ஒன்றான, எருசலேமில் ஆரவாரமாக உட்செல்லும் நிகழ்ச்சியே அவருக்கு முன்பாக இருந்தது. இருப்பினும் அவர் தாம் மரிக்கப் போவதை அறிந்திருந்தார், அதைத் தமது சீஷர்களிடம் கூறினார்.*

*உண்மையில், அவருடைய மரணம் நீண்ட காலத்திற்கு முன்பாகவே முன்னுரைக்கப்பட்டிருந்தது. பழைய ஏற்பாட்*

டின் தீர்க்கதரிசிகள் அவர் மரிப்பார் என்று முன்னுரைத்தனர். எடுத்துக்காட்டாக, யோவான், இயேசுவின் வஸ்திரங்களுக்காக போர்ச் சேவகர்கள் சீட்டுப் போடுதலைப் பற்றிக் குறிப்பிடு கையில் (யோவா. 19:24) மற்றும் இயேசு "தாகமாயிருக்கிறேன்" என்று கூறுதலைக் குறிப்பிடுகையில் (யோவா. 19:28), படை வீரர்கள் அவருடைய கால்களை முறிக்காதிருந்ததைக் குறிப் பிடுகையில் (யோவா. 19:36) மற்றும் அவருடைய விலாவில் குத்தப்படுதலைக் குறிப்பிடுகையில் (யோவா. 19:37), பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன வசனங்கள் நிறைவேறினதைச் சுட்டிக்காட்டுகிறார்.

புதிய ஏற்பாட்டை ஏவுதலுடன் பிரசங்கித்தவர்கள் இயேசுவின் மரணம் வேத வசனங்களை நிறைவேற்றுவதைச் சுட்டிக் காண்பித்தனர். அவர்கள் யூதர்களிடம் பேசியதால், இயேசுவை <u>சிலுவையிலறையப்பட்ட</u> மேசியாவாக அவர் களுக்கு நிரூபிக்க வேண்டியது அவசியமாய் இருந்தது. யூதர் களால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. மேசியா ஒரு பெரிய இராஜாவாக வந்து, ரோமப்படைகளுக்கெதிராக பெரிய யுத்தத்தில் அவர்களை வழிநடத்தி மீட்பார் என்பதே அவர்களின் கருத்தாக இருந்தது, மேசியா சிலுவையில் மரித்தார் என்பது அவர்களுடைய எண்ணத்திற்குப் புறம்பாயிருந்தது. ஏனென்றால் சிலுவையிலறையப்பட்ட எவரும் சபிக்கப்பட்டவர்கள் என்று அவர்கள் நம்பினர். எனவே, பவுல், பிசீதியாவின் அந்தியோகியாவில் இருந்த யூதர்களிடம், "எருசலேமில் குடியிருக்கிறவர்களும், ... அவரை அறியாமலும், ஓய்வுநாள்தோறும் வாசிக்கப்படுகிற தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களை அறியாமலும், அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்ததினால் அந்த வாக்கியங்களை நிறைவேற்றினார்கள்" என்று கூறினார் (அப். 13:27). இயேசுவின் மரணம் வேத வாக்கியங்களின் <u>நிறைவேற்றமாகும்</u>.

இயேசு மரிக்கையில் என்னென்ன தீர்க்கதரிசனங்கள் நிறைவேறின? பழைய ஏற்பாட்டின் அதிகாரங்களில் ஒன்றான - சங்கீதம் 22ஐக் கவனியுங்கள். அது இயேசு சிலுவையில் கூறின வசனமாகிய, "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்ற அதே வார்த்தைகளுடன் தொடங்குகின்றது (சங். 22:1). பிறகு அது, மேசியா "மனுஷரால் நிந்திக்கப்பட்டும், ஜனங்களால் அவமதிக்கப்பட்டும்" இருப்ப தாகவும், அவர் பரியாசம் பண்ணப்பட்டு அவரது கரங்களும்,

கால்களும் ஊடுருவப்பட்டு, அவரது வஸ்திரம் பங்கிடப்படுதல் பற்றியும் பேசுகின்றது (வ. 6-8, 16-18). மேலும் அதில், "என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின் பேரில் சீட்டுப் போடுகிறார்கள்" (வ. 18) என்ற நினைவு கூறக்கூடிய வசனமும் உள்ளது.

இப்படிப்பட்ட வசனங்களின் நிறைவேற்றம் நமக்குக் கூறுவதென்ன? இயேசுவின் மரணம் முன்னுரைக்கப்பட்டது என்பதைக் காட்டுவதோடு, வேதாகமமானது தேவ ஏவுதல் கொண்டது மற்றும் இயேசு, தேவனுடைய குமாரன் என்பதை நிரூபிக்கின்றது. எந்த ஒரு மனிதனும், வேதாகமத்தின் எழுத்தாளர்களைப் போல் இவ்வளவு துல்லியமாக ஒரு மனிதனின் மரணத்தை தங்கள் சொந்த ஞானம், வல்லமையினால் முன்னுரைக்க இயலாது. விசேஷமாக ஒரு மனிதன் பிறப்பதற்கு நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்னதாகவே இப்படி ஒரு முன்னுரைத்தலை யாராலும் தரவே முடியாது! பிறகு, தீர்க்கதரிசிகளால், எப்படி இவ்விதம் முன்னுரைக்க முடிந்தது? தேவனுடைய வல்லமையினால்தான்! இந்த தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமானது, இயேசுவே, தேவனால் அனுப்பப்பட்ட மேசியா என்பதை நிரூபிக்கின்றன. மற்றும், அந்த தீர்க்கதரிசிகள் மேசியாவைப் பற்றி தேவனால் ஏவப்பட்டே எழுதினார்கள் என்பதும் தெளிவாகின்றது.

## அது திட்டமிடப் பட்டதாகும்

அது திட்டமிடப்பட்டதாகையால், இயேசுவின் மரணம் வித்தியாசமானதாகும்.ஒரு நல்ல மனிதராக தற்செயலாக சட்டத்தின் பிடியில் அகப்பட்டவரல்ல அவர். அவருடைய மரணம் வேண்டுமென்றே செய்யப்பட்டதாயிருந்தது. அவரது வாழ்வு முழுவதும் சிலுவையின் நிழலிலேயே வாழப்பட்டதாகும். அவர் பிறந்த நாள் முதற்கொண்டு, மரிக்கின்ற வரையில் கொல்கொதாவில் தமக்கு நியமிக்கப்பட்டிருந்ததை நோக்கி எவ்வித மாற்றமுமின்றி நடந்தார்.

பெந்தெகொஸ்தே நாளன்று, பேதுரு, இயேசுவை சிலுவையிலறையக் காரணமாயிருந்த யூதர்களிடம், இயேசுவைப்பற்றி, "... தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக் கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய

கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள்" (அப். 2:23) என்று கூறினார். தேவனுடைய தீர்மான திட்டத்தின்படியும், முன்னறிவின்படியும் இயேசு சிலுவையிலறையப்பட்டார். தேவன் அதை அவ்விதமாய்த் திட்டமிட்டார்.

இவ்வாறு, கல்வாரியில் நடந்தது தேவனுடைய திட்டத்தை துன்மார்க்க மனிதர்கள் தூக்கி எறிந்த ஒரு நிகழ்வல்ல. அது தேவன் திட்டமிட்டபடியே நடந்தது. இது இயேசுவைக் கொலை செய்தவர்களின் குற்றத்தை நீக்கவில்லை. கூட்டத்திலிருந்த ஒவ்வொருவரும், தங்கள் சொந்த விருப்பத்தின்படியே, "சிலுவையிலறையும்!" என்று கூறினார்கள். ஒவ்வொருவரும் தங்கள் சொந்த விருப்பத்தின்படியே இயேசுவை சிலுவையிலறைய வேண்டும் என்பதைத் தேர்ந்துகொண்டு, இயேசுவின் மரணத்தினால் குற்றவாளியானதை இவ்விதமாய்த் தாங்களே தேர்ந்து கொண்டனர்.

இயேசு ஏன் மரித்தார்? தேவன் அவரது மரணத்தைத் திட்டமிட்டிருந்ததால் அவர் மரித்தார். இயேசுவின் மரணம் என்பது தேவனுடைய நித்திய நோக்கத்தின் ஒரு பாகமாகும், இது தேவனுடைய மாறாத ஆலோசனைப்படியானதாகும். இது இயேசுவின் மரணத்தைத் தனிச் சிறப்புள்ளதாக்கியது.

## அதைச் சுற்றி நடந்த சம்பவங்கள்

அவரது சிலுவை மரத்தைச் சுற்றி நடந்த சம்பவங்களினால், இயேசுவின் மரணம் வித்தியாசமானதாயிருக்கிறது. மத்தேயு 27ல் நான்கு குறிப்பிடத்தக்க சம்பவங்கள் கூறப்படுகின்றன. மூன்று மணி நேரம் இயற்கைக்கு அப்பாற்பட்ட இருள் சூழ்ந்தது (வ. 45), தேவாலயத்தின் திரைச் சீலை மேல் தொடங்கிக் கீழ் வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது (வ. 51), ஒரு பூமியதிர்ச்சி (வ. 51), அவர் உயிர்த்தெழுந்த பிறகு பரிசுத்தவான்களின் சரீரங்கள் பல உயிர்த்தெழுதல் (வ. 52, 53).

புலன்களால் உணரக்கூடிய இந்த சம்பவங்கள் யாவும், சிலுவையில் நடந்தது அசாதாரணமான ஒன்று என்று நமக்குக் கூறுகின்றன - அது இயற்கைக்கு அப்பாற்பட்டது. இந்தச் சம்பவங்கள் யாவும்: தேவன் இதைச் செயலாற்றுகிறார்! தேவ வல்லமையின் ஈடுபாடு இதில் உள்ளது! என்று நமக்கு அறிவிக்கின்றன. மனிதனால் சூரியனை இருளடையச் செய்ய

முடியாது, ஆனால் தேவனால் முடியும், அதைச் செய்தார். தேவாலாயத்தின் திரைச் சீலை கீழிலிருந்து மேல்வரை கிழிவதற்கு மாறாக தேவன் அதை மேல் தொடங்கிக் கீழ் வரைக்கும் இரண்டாகக் கிழித்தார், எனவே இதை யார் செய்திருக்க முடியும் என்பது தெளிவாகிறது. மனிதர்கள் பூமியதிர்ச்சியை ஏற்படுத்த முடியாது, ஆனால் தேவனால் முடியும், அதைச் செய்தார். மனிதர்களால் மரித்தவர்களை உயிரோடு எழுப்ப முடியாது, ஆனால் தேவனால் முடியும், அதைச் செய்தார். மனித குல வரலாற்றிலேயே தனிச் சிறப்பு வாய்ந்த சம்பவம் ஒன்று சிலுவையில் நிகழ்ந்தது: தேவனுடைய குமாரன் அதில் மரித்தார். நடந்த அற்புதமான சம்பவங்கள் இந்த உண்மையை உறுதிப்படுத்துகின்றன.

"நூற்றுக்கு அதிபதியும், அவனோடே கூட இயேசுவைக் காவல் காத்திருந்தவர்களும், பூமி அதிர்ச்சியையும், சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து, 'மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்' என்று கூறியதில்'' (மத். 27:54) வியப்பேதுமில்லை.

## அது மற்றவர்களுக்கான ஒரு மரணம் ஆகும்

அது மற்றவர்களுக்கான ஒரு மரணம் என்பதால் இயேசுவின் மரணம் வித்தியாசமானதாகும். அவரது மரணம் முன்னுரைக்கப்பட்டு, திட்டமிடப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருந்தபடியால், தேவனுடைய நோக்கத்தில் அதன் பங்கு என்னவாயிருந்தது? முக்கியமான பிரச்சனை இதுதான்: இயேசு குற்றமொன்றும் அறியாதவரானால், தேவனுடைய திட்டத்தின் கீழ் அவர் ஏன் மரிக்க வேண்டியிருந்தது?

இயேசு தமக்காக மரிக்கவில்லை ஏனெனில் அவர் குற்றமொன்றும் அறியாதவராகவும் பாவமில்லாதவராகவும் இருந்தார், அவர் மற்றவர்களுக்காக மரித்தார். மற்றவர்கள் இரட்சிக்கப்பட வேண்டுமானால் அவர் மற்றவர்களுக்காக மரிக்க வேண்டியிருந்தது.

கிறிஸ்து மற்றவர்களுக்காக மரித்தார் என்று புதிய ஏற்பாடு வலுவாகப் போதிக்கின்றது. இயேசு, "இது பாவ மன்னிப்புண் டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன் படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்றார்

*(மத். 26:28). பவுல், "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே ..." என்று எழுதினார் (ரோமர் 5:8). பவுலின் சுவிசேஷமானது, "கிறிஸ்துவானவர் நமது பாவங் களுக்காக மரித்தார்" (1 கொரி. 15:3) என்பதையும் உள்ளடக்கி யுள்ளது. எபிரெயருக்கு எழுதின ஆசிரியர், "தேவனுடைய கிருபையினாலே ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்க்கும்படிக்கு" (எபி. 2:9) கிறிஸ்து மனிதனாக வந்ததாகக் கூறினார்.*

*அதே நற்செய்தியை ஏசாயா 53 பழைய ஏற்பாட்டில் அறிவிக்கிறது. வசனங்கள் 4 லிருந்து 6 வரை பின்வருமாறு கூறுகிறது:*

> *மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; ... நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம் ... கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப் பண்ணினார்.*

*இயேசு மற்றவர்களுக்காக மரித்தார். இது என்ன பொருள் தருகிறது? மற்றவர்களுடைய பாவங்களை இயேசு தம்மேல் சுமந்தார்; அவர்களுடைய குற்றங்களையும், அவர்களின் பாவங்களுக்கான தண்டனையையும் இயேசு தம்மேல் ஏற்றுக் கொண்டார். பவுல்,*

> *தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புர வாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார் ... நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் (2 கொரி. 5:19, 21) என்று கூறினார்.*

*சிலுவையிலே மரித்தபோது இயேசு பாவமாக்கப்பட்டார். என்னுடைய, உங்களுடைய பாவங்களுக்கான தண்டனையை அவர் பெற்று, நரகத்தின் வேதனையை நமக்காக அவர் ருசி பார்த்தார். நரகம் என்பது மனிதர்களை தேவனிடத்திலிருந்து என்றென்றும் பிரித்து வைக்கும் இடம் ஆகும் (2 தெச. 1:9). இயேசு தமது மரண வேளையில், தேவனை விட்டுப் பிரிக்கப்*

*பட்டதால், "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கை விட்டீர்?" என்று கதறினார் (மத். 27:46).*

*தேவன் அவரை ஏன் கைவிட்டார்? ஏனெனில் இயேசு பாவமாக்கப்பட்டார்! ஏனெனில் நம் எல்லாருடைய பாவங்களையும் அவர் தம்மேல் ஏற்றுக்கொண்டார். எல்லா பரிசுத்தமும் நிறைந்த தேவன் தமது சமூகத்தில் பாவத்தை அனு மதிக்க மாட்டார்; கிறிஸ்து சிலுவையிலே நமது பாவங்களை ஏற்றுக் கொண்டதினால் தேவன் அவரை விட்டு விலகினார். அவர் கிறிஸ்துவை விட்டுத் தம்மைப் பிரித்துக் கொண்டார், அது அவர் பாவம் செய்தவர்களை விட்டு நித்திய காலத்திற்கும் விலகியிருப்பதற்கு ஒப்பான பிரிவாகும்.*

*இயேசு நரகத்தின் வேதனையையே அனுபவித்தார், பாவத்திற்கான மொத்த ஆக்கினையையும் அவர் அனு பவித்தார். அவர் நமது பாவங்களுக்கான முழுக்கிரயத்தையும் செலுத்தித் தீர்ந்தபோது, பாவங்களுக்கான முழுத்தண்டனை யையும் பெற்று முடித்தபோது, ''முடிந்தது'' என்று கூறி, மரித்தார்.*

*இயேசு ஏன் சிலுவையிலிருந்தார்? அவர் உங்களுடைய மற்றும் என்னுடைய இடமாகிய அதில் நமக்குப் பதிலாகப் பாடுபட்டார். அவர் நமக்காக மரித்ததினால், நமது பாவக் குற்றங்களை தம்மேல் ஏற்றுக் கொண்டதினால், நாம் இரட்சிக்கப்பட முடியும்! நமது பாவங்களுக்கான விலையை அவர் செலுத்தியதால், நாம் அந்த விலையைச் செலுத்தத் தேவையில்லாமல் போனது. நரகத்தின் வேதனையை அவர் அனுபவித்ததால், நாம் நரகத்திற்குச் செல்லப் போவதில்லை.*

*மனிதகுல வரலாற்றில், ஒரு மனிதனுடைய மரணமானது அநேக வேளைகளில் மற்றவர்களுக்கு சரீரப்படியான மீட்பை பலனாகத் தருகிறது. ஆனால் மாம்சத்தில் வந்த, தேவத்துவம் வாய்ந்த கிறிஸ்து ஒருவர் மட்டுமே பாவங்களுக்கான விலையைச் செலுத்தி எல்லா மக்களின் பாவங்களையும் தம்மேல் ஏற்றுக்கொள்ள முடிந்தது. கிறிஸ்துவின் மரணம் மட்டுமே எல்லாருக்கும் ஆவிக்குரிய மீட்பைப் பெறுகிற வாய்ப்பை அளிக்கிறது.*

# அதனைத் தொடர்ந்து ஒரு உயிர்த்தெழுதல் உண்டாயிற்று

*இயேசுவின் மரணத்தைத் தொடர்ந்து ஒரு உயிர்த்தெழுதலும் உண்டானதால், அவரது மரணம் வித்தியாசமானதாகும். வாரத்தின் முதலாம் நாளிலே, கல்லறையை மூடியிருந்த கல்லைத் தூதன் ஒருவன் புரட்டித் தள்ள, இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தார். கல்லறைக்கு வந்த பெண்களிடம் அந்தத் தூதன், "நீங்கள் பயப்படாதிருங்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்" என்று கூறினான் (மத். 28:5, 6). இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார்; இவ்வகையில் அவரது மரணம் தனிச் சிறப்புள்ளதாகும்.*

*இயேசு மரணத்தை வெற்றி கொள்வதற்காகவே மரித்தோரிலிருந்து எழுந்தார். அவர் மரித்துபோன நிலையிலேயே இருந்திருந்தால் மரணம் அவரை வெற்றி கொண்டிருக்கும். ஆனால், கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினால் அவர் மரணத்தின் மீது வெற்றி கொண்டார்.*

*இந்த வெற்றியின் மூலமாக, இயேசு, "... பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரனுமாயிருக்கிறார்" (ரோமர் 1:5). கிறிஸ்துவின் தேவத்துவத்திற்கு உயிர்த்தெழுதல் ஒரு பலமான விளக்கமாய் உள்ளது. இது அவர் தம்மைத் தேவனுடைய குமாரன் என்று சொல்லிக் கொண்டதை மெய்ப்பிக்கிறது.*

*அவர் தேவனுடைய குமாரனாகையால், சிலுவையில் அவர் செலுத்தின பலி பலனுள்ளதாய் இருக்கிறது. இது கிறிஸ்து தமது மரணத்தின்போது உங்களுக்கு ஒரு காசோலையை எழுதி வைத்துள்ளது போன்றதாகும். அது உங்கள் பெயருக்கு எழுதப்பட்டுள்ளது. அந்தக் காசோலையின் மதிப்பு எவ்வளவு? அது இரட்சிப்பு மற்றும் நித்திய ஜீவனுக்கானது - அவ்வளவு கொடுப்பதாக அவர் வாக்குத்தத்தம் செய்துள்ளார். அது கிறிஸ்துவாலேயே கையொப்பமிடப்பட்டது. அந்தக் காசோலை நல்லதென்ற தேவனுடைய உத்திரவாதமும் உள்ளது. இவ்விதமாக நமது இரட்சிப்பைக் குறித்து நாம் இரு மடங்கு நிச்சயமாயிருக்கலாம்: கிறிஸ்து நமக்காக மரித்தார்*

என்பதால் நாம் இரட்சிக்கப்பட முடியும் என்பதிலும், மரித்த அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினால் நாம் இரட்சிக்கப் பட முடியும் என்பதிலும் நிச்சயமாய் இருக்கலாம்.

## முடிவுரை

பிறகு, ஏன் இயேசு ஒரு சாதாரண குற்றவாளியைப் போல் மரிக்க வேண்டும்? ஆயிரக்கணக்கான மற்றவர்களின் மரணம் போலவே அவரது மரணமும் இருந்தாலும், அதுவும் ஒரு தனிச் சிறப்புதான்.

இயேசு இந்தத் தனிச் சிறப்பான மரணத்தை அடைந்தது ஏன்? அவரது வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலினால் நாம் இரட்சிக்கப்படும்படி அவர் மரணமடைந்தார் என்பதே சுவிசேஷத்தின் நற்செய்தியாகும்.

நற்செய்தியுடன் ஒரு தீய செய்தியும் இணைந்துள்ளது. பாவம் நிஜமானது, பாவம் உங்களை ஆக்கினைக்குள்ளாக்கும். பாவம் செய்து, கிறிஸ்துவால் கிடைக்கும் இரட்சிப்பை மறுதலிக்கிற யாவரும் என்றென்றைக்கும் இழக்கப் படுவார்கள். ஒரு நாளில் நியாயத்தீர்ப்பு வருகிறது, நாம் யாவரும் அன்று நியாயந்தீர்க்கப்படுவோம். நியாயத் தீர்ப்புக்குப் பிறகு, பரலோகத்திலோ, நரகத்திலோ நித்தியத்திற்கும் இருக்க வேண்டும். அவரது மரணத்தினால் உண்டான இரட்சிப்பை நீங்கள் பெற்றிருக்காவிடில் இந்த உண்மையினாலுண்டாகும் எவ்வித ஆறுதலும், தேறுதலும் உங்களுக்கு இல்லை.

பாவம், நியாயத்தீர்ப்பு, நரகம் என்பவைகளின் உண்மை நிலையானது உங்களை பயமடையச் செய்யத் தேவையில்லை. பாவத்தின் ஆக்கினை பற்றிய பயத்தைக்கூட நம்மிடத்திலிருந்து எடுத்துப் போடுவதற்காகவே கிறிஸ்து மரித்தார். பாவத்தின் தண்டனையிலிருந்து நீங்கள் அவரது மரணத்தால் இரட்சிக்கப் படுவதன்மூலம் விடுதலையடைய முடியும்.

---

**குறிப்புகள்**

[1]Burton Coffman, *Commentary on Matthew* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1979), 470.

[2]James Hastings, ed., *Hastings Bible Dictionary* (New York: Charles Scribners Sons, 1898), 1:193